**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.854/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | தாமேதரன், வயது 42 |
| Father Name/Husband Name | : | பெருமாள் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of June 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்தில் தனிபிரிவு தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.07.2024 ஆம் தேதி கோவில்பட்டி மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது காலை 09.00 மணியளவில் நான், சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர் 1320 தங்கமாரியப்பன் ஆகியோர் சகிதம் ஆய்வாளர் உத்தரவின்படி கயத்தார், சுடலைமாடாசாமி அருகே ரோந்து செய்து வந்தபோது சந்தேகம்படியாக நின்று கொண்டிருந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த உத்தண்டம், வயது 53, த.பெ. ராஜா, கருப்பசாமி கோவில் தெரு, கயத்தார் என்பவர் கையில் பிளாஸ்டிக் சாக்கு பையுடன் இருந்தார். அவரை சோதனை செய்து பார்த்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட Veeran Brandy பாட்டில்கள் 8 எண்ணம் வைத்திருந்தார்.

2 மேற்படி நபரை விசாரித்தபோது டாஸ்மாக் கடையிலிருந்து பிராந்தி பாட்டிலை வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். மேற்படி நபர் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்க வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி, அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீசார் பார்டியாகிய நாங்களே

கையொப்பம் செய்தோம். மேற்படி சொத்து சகிதம் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் நிலைய குற்ற எண். 415/2024 U/s 4(1)(A) TNP Act ஆக வழக்கு பதிவு செய்ய மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் இன்பராஜ் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். அந்த அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

3 சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடம் என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது எதிரி வழக்கு சொத்துக்களை விற்று கொண்டிருந்ததாகவோ அல்லது பொதுமக்கள் மதுபாட்டில்களை வாங்கி கொண்டிருந்தாகவோ அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான். அத்தாட்சியில் தனிநபரிடம் கையொப்பம் பெறபட்டதா என்றால் யாரும் முன்வரவில்லை என்பதால் கையொப்பம் பெறபடவில்லை. அவ்வாறு கையொப்பம் பெற மறுத்தற்கு தனிநபர் மீது நடவடிக்கை எடுக்கபட்டதா என்றால் எடுக்கப்படவில்லை. நாங்கள் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்பதால்தான் தனிநபரிடம் அத்தாட்சியில் பெறவில்லை என்றால் சரியல்ல.

4 எதிரி விற்று கொண்டிருந்தாக சொல்லப்படும் மதுபாட்டில்கள் தனிநபர் பயன்பாட்டிற்கான அளவை விட குறைவானது என்றால் சரிதான். அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் குறிப்பிட்டு எந்த இடத்தில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபட்டது என்று அத்தாட்சியில் துலங்காது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.